கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	501,00,82	-	-
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	341,50,31	1,80,94	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	819,23,92	-	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	207,95,39	59,07,35	-
	பெரு மொத்தம்	112,173,54,09	19,757,75,94	2,340,60,32

9. அறிவிப்புகள் —தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

12. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதத்திற்கான பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுதுகள் உயர்வு பெறவே, இப்பூவுலகிலிருந்து விடைபெறும் வினாடி வரை வேராக உழைத்த நம் தாய்,* (மேசையைத் தட்டும் ஒலி) *வெற்றிகளுக்கே விலாசமாகி, விண்முட்ட ஜொலித்த நம்முடைய அம்மா,*